1974 சனவரி 29]

Pavement on Salem-Dindigul road.

* 222 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Highways Department has undertaken the widening of the pavement on the Salem-Dindigul section; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(a) Yes.

(b) Widening and strengthening of reach from Km. 206/0 to 375/0 Salem-Dindigul section of National Highways seven have been included in the annual plan for 1971–72 and eight estimates have been sanctioned by Government of India. An expenditure of Rs. 60,16,168 has been incurred on these works upto June 1973.

பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகைகள்.

*223 வினு – திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கூடலூர் பொதுப்பணித்துறை பிரயாணிகள் விடுதியை விரிவு படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) கூடலூர் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகையில் ரூ. 66,000 செலவில் மேலும் இரு சூட்டுகள் கட்டுவதற்கான திட்டத்தை அரசு பரிசீலித்து அதை தற்போதைக்கு ஏற்றுக்கொள்ளவியலாது என ஆணையிடப்பட்டுள்ளது.

*224 வினு – திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்ண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சாத்தனூர் அணைக்கட்டுப் பகுதியில் தங்கும் விடுதி ஒன்று கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :—(அ) சாத்தனூர் நீர்த்தேக்கப் பகுதியில் தங்கும் விடுதி கட்டும் உத்தேசம் ஒன்றும் தற்போது இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தற்போது இல்லை என்று சொன்னார்கள் ஆனால் பொது மக்களும், பார்வையாளர்களும், மற்ற மாநிலங்களில் இருந்து சாத்தனூர் டாமைப் பார்க்க வருகிறவர்களும் தங்குவதற்கு இட வசதி இல்லை. எனவே அதை உத்தேசித்து அத்திட்டத்தில் அதைச் சேர்க்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சாத்தனூர் பகுதியில் அணைக்கட்டு விடுதி ஒன்று ஏற்கெனவே இருக்கிறது. விருந்தினர் விடுதிகள் மூன்று உள்ளன. இவையில்லாமல் சீர் செய்யாத விடுதிகளும் இருக்கின்றன. ஆகவே, தற்போது கட்டவேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

*225 வின—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாயூரம் நகரில் பொதுப்பணித்துறையின் சார்பில் பயணிகள் விடுதி ஒன்று கட்டப்பட்டு வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*226 வின—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையத்தில் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை கட்டுவது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மேட்டுப்பாளையத்தில் கூடுதலா பொதுப் பணித்துறை ஆய்வு மாளிகை கட்டுவதற்கான செயற் குறிப்பு அரசின் கவனிப்பில் உள்ளது.

Assignment of land in Arcotkuppam.

* 227 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that lands were given to "Anna Anbu Illam" and "Kalaignar Karunanidhi Kai Thozhil Koodam" in Arcotkuppam village, Tiruttani taluk; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ), (இ) . "கலைஞர் கருணாநிதி தொழில் கூடம்" என்ற பெயரில் சங்கமெதுவும் இல்லை ; அதற்கு நிலம் எதுவும் கொடுக்கப்படவுமில்லை.